**செ.வெ.எண்.94** **நாள்.27.07.2026**

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும் அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலகத்தில் காலியாக உள்ள **ஆற்றுப்படுத்துநர் (Counsellor)** 1 தற்காலிக பணியிடத்திற்கு, கல்வி தகுதி: (10 + 12 + 3 Pattern) இளங்கலையில் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் (Recognized University) (சமூகப்பணி (Social Work) / சமூகவியல் (Sociology) / உளவியல் (Psychology) / பொது சுகாதாரம் (Public Health) / ஆற்றுப்படுத்துதல் (Counselling) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை படித்திருக்க வேண்டும் அல்லது முதுநிலை பட்டயப்படிப்பு (PG Diploma in Counseling and Communication) ஏதேனும் ஒன்றை படித்திருக்க வேண்டும். மேலும் குழந்தைகள் சார்ந்த ஆற்றுப்படுத்துதல் பணியில் 1 ஆண்டுகள் (தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் குழந்தைகள் இல்லங்கள்) முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் கணினி இயக்குவதில் திறமை வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். வயது வரம்பு 42 க்குள் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு தொகுப்பூதியம் ஒரு மாதத்திற்கு - ரூ.18,536/-.

மேலும் **உதவியாளர் உடன் கலந்த கணினி இயக்குபவர்** (Assistant Cum Data Entry Operator) 1 தற்காலிக பணியிடத்திற்கு, கல்வி தகுதி: (10 + 12) அங்கிகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 12ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான டிப்ளமோ மற்றும் கணினி பிரிவில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பணி அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வயது வரம்பு 42 க்குள் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு தொகுப்பூதியம் ஒரு மாதத்திற்கு - ரூ.13,240/- மேற்கண்ட தகுதிகள் பெற்றிருக்க கூடிய தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை **07.08.2026 அன்று மாலை 05.00 மணிக்குள்** மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர்-621704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பதவி குறித்த தகவல்களுக்கு மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) வழிகாட்டுதல் நெறிமுறைகளை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டுமெனவும், மேலும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.மிருணாளினி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர் மாவட்டம்.**